# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 28 புதன்கிழமை 15.05.2024 கதிர் 258







# குமுதினிப் படுகொலையின் 39 ஆவது நினைவேந்தல் நெடுந்தீவு மண்ணில் உணர்வெழுச்சியுடன் அனுட்டிப்பு

## உப்புக் கடலை உரசிய நினைவுகள் கவி நூலும் வெளியீடு



நெடுந்தீவு குமுதினிப் படகுப் படுகொலையின் 39 ஆவது நினைவேந்தல் நிகழ்வு இன்று காலை நெடுந்தீவு மாவிலி துறைமுகத்தில் அமைந்துள்ள குமுதினி படுகொலை நினைவு இடத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு, நினைவுத் தூபிக்கு மலர் மாலை அணிவித்து, நினைவுச் சுடர்கள் ஏற்றி, மலர் வணக்கம் செலுத்தப்பட்டு அஞ்சலி நிகழ்வு உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது.

அத்தோடு பசுந்தீவு ருத்திரன் எழுதிய குமுதினி படுகொலை நினைவுகளைச் சுமந்த “ உப்புக் கடலை உரசிய நினைவுகள்” என்ற கவி நூல், நெடுந்தீவு மாவிலித் துறைமுகத்தில் தரித்து நிற்கும் குமுதினிப் படகில் நூல் சிவகுரு ஆதின முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

2➤

# வவுனியாவில் முள்ளிவாய்க்கால் கஞ்சி




முள்ளிவாய்க்கால் படுகொலையின் 15 ஆம் ஆண்டு நினைவேந்தலையொட்டி வவுனியா, திருநாவற்குளத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கி வைக்கப்பட்டது.

திருநாவற்குளம் பகுதியில் உள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் பலர் இணைந்து முள்ளிவாய்க்கால் கஞ்சியை திருநாவற்குளம் பிரதான வீதியில் வைத்து இன்று வழங்கினர்.

வீதியால் சென்ற பலரும் அதனை வாங்கி பருகிச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# மொபைல் போன் பயன்படுத்தும் பிள்ளைகளின் மூளையில் பாதிப்புடன் மன அழுத்தம் ஏற்படலாம்

## உளவியல் மருத்துவர் ரூமி ரூபன் எச்சரிக்கை



சிறுவர்கள் கையடக்கத் தொலைபேசிகளுக்கு அடிமையாகி மன அழுத்தம் போன்ற நோய்களுக்கு ஆளாகும் அபாயம் அதிகம் இருப்பதாக காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் உளவியல் மருத்துவர் ரூமி ரூபன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்- “குழந்தைகளின் மொபைல் போன் பழக்கத்தால், கற்கும் வாய்ப்பு, விளையாடும் வாய்ப்பு, நண்பர்களுடன் பழகும் வாய்ப்பு, அன்றாட வாழ்க்கையை நடத்தும் வாய்ப்பு போன்றவற்றை இழந்துள்ளனர்.

இந்த சூழ்நிலையில், இன்று சில பிள்ளைகள் மொபைல் போன் இல்லாமல் இருக்க முடியாது என்ற நிலையை அடைந்துள்ளனர். கைபேசியை கொடுக்காவிட்டால் அவர்களுக்கு கோபம் வரலாம், தாய்மார்களை எதிரிகளைப் போல் பார்ப்பார்கள். மனச்சோர்வு போன்ற நோய்களால் அவர்கள் பாதிக்கப்படலாம்.

குறிப்பாக இது 2➤

# விசா வழங்கல் அதிகாரத்தை கொடுத்தது யார்? பின்னணியில் ‘கொமிஷன்’ மோசடி உள்ளதா?

## முப்பது மில்லியன் டொலர் நட்டம் என்கிறார் முன்னிலை சோஷலிச முன்னணியின் புபுது




இந்திய விசா நாடகம் காரணமாக இந்த ஆண்டு அரசாங்கத்திற்கு முப்பது மில்லியன் டொலர் நட்டம் ஏற்படவுள்ளதாக முன்னிலை சோசலிச கட்சியின் கல்வித்துறை செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் “ஜீபிஎஸ் மற்றும் ஐவிஎஸ் ஆகிய இரண்டு இந்திய விசா வழங்கும் நிறுவனங்களுக்கு இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு ஒன்லைன் விசா வழங்குதல் மற்றும் விமான நிலையத்தில் வைத்து விசா வழங்குதல் ஆகியவற்றிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதன் மூலம் இலங்கை பெருமளவு வருமான இழப்பை எதிர் நோக்கியுள்ளது.

முன்னர், ஐரோப்பிய சுற்றுலா பயணிகளுக்கான விசா கட்டணம் 50 டொலர்களாக இருந்தது. ஆனால், புதிய முறையின் கீழ் விசா கட்டணம் 75 டொலர், இந்திய நிறுவனத்தின் சேவைக் கட்டணம் 18.50 டொலர் மற்றும் வசதி வழங்கல் கட்டணம் 7.27 டொலர் என மொத்தமாக 100.77 டொலர்களாக 2➤

# அமெரிக்கத் தூதுவர் யாழ்ப்பாணம் விஜயம்



இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு இன்று விஜயம் செய்தார்.

“வடக்கு மாகாணத்தில் உள்ள மக்களுக்கான தொடர்ச்சியான அமெரிக்க ஒத்துழைப்பு மற்றும் ஆதரவுக்கான வழிகளை ஆராய்வதற்காகச் சிவில் சமூகம், இளைஞர்கள், உள்ளூர் அரச அதிகாரிகள் மற்றும் மதத் தலைவர்கள் ஆகியோரின் பலதரப்பட்ட கண்ணோட்டங்களைக் கேட்பதற்காக இந்த வாரம் நான் மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ளேன்” - என்று அமெரிக்கத் தூதுவர் தனது எக்ஸ் வலைத்தளத்தில் 2➤

## விசா......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செலுத்தவேண்டிய வகையில் கட்டணம் இரண்டு மடங்காகியது. இதைப் பற்றி பல விமர்சனங்கள் எழுந்ததால், மூன்று மாத விசாவிற்கு ஐரோப்பிய சுற்றுலாப் பயணிக்கு வசூலிக்கப்படும் கட்டணத்தை மீண்டும் 50 டொலர்களாக மாற்றுவதற்கு அமைச்சரவை முடிவு செய்தது.

ஆனால், உண்மையில் என்ன நடக்கிறது? அந்த 50 டொலர் சுற்றுலா விசா கட்டணத்திலும் 10 டொலர் இந்திய நிறுவனத்திற்கு தரகுப் பணமாக வழங்கப்படுகிறது. எளிமையாகச் சொன்னால், இதற்கு முன் இலங்கைக்கு வரும் ஒவ்வொரு சுற்றுலாப் பயணிகளிடமிருந்தும் 50 டொலர் அரசாங்கம் பெற்றது, இப்போது அது 40 டொலராக குறைந்துள்ளது.

அதன்படி, ஒவ்வொரு உள்வரும் சுற்றுலாப் பயணிகளும் இந்திய நிறுவனத்திற்கு 10 டொலர்களை கொடுக்கின்றனர். இதன் காரணமாக நாட்டின் அந்நியச் செலாவணி வருமானம் குறைந்து வருகிறது. எதிர்பார்த்தபடி இந்த ஆண்டு 3 மில்லியன் சுற்றுலா பயணிகள் வந்தால், அரசுக்கு 30 மில்லியன் டொலர்கள் இழப்பு ஏற்படும். அந்தப் பணம் இந்தியாவுக்கே செல்கிறது.

இத்தகைய மூடத்தனமான முடிவை எடுத்தது யார்? அமைச்சரவையில் பொருளாதாரக் கொலையாளிகள் இருக்கிறார்களா? இதன் பின்னணியில் பெரிய கொமிஷன் மோசடி உள்ளதா? அல்லது இது பொதுத் தேர்தல் நிதியுதவித் திட்டத்தின் ஒரு பகுதியா? எதுவாக இருந்தாலும், இந்த விசா வழங்கல் முறை குறித்து மௌனம் காக்க விடாமல் இதற்கு பொறுப்பானவர்கள் தண்டிக்கப்படல் வேண்டும். இது குறித்து கேள்வி எழுப்ப முன்வருமாறு மக்களை அழைக்கின்றோம்" என்றார். (ரெம-56)

## மொபைல்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிள்ளைகளின் மூளையில் பாதிப்பை ஏற்படுத்தி படைப்புத் திறன், கற்பனைத் திறன், சிந்திக்கும் திறன் ஆகியனவற்றை குறைக்கலாம்" என குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களுக்கான அனைத்து கற்றல் குறிப்புகளையும் மொபைல் போன்களுக்கு அனுப்புவதால் பிள்ளைகள் அதனையொரு சாட்டாக கொண்டுள்ளனர், இது பாரிய ஒரு பிரச்சினையாக மாறியுள்ளது என பெற்றோர் குற்றம் சாட்டுகின்றனர், எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரெம-57)

## அமெரிக்க......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பதிவிட்டுள்ளார். யாழ். சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் விவசாய மாணவர்களுடன் மறுசுழற்சி மற்றும் பாதுகாப்பு மற்றும் மரங்களை நடுதல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சிறப்பு நிகழ்வு இன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர். (அ)

## குமுதினி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குமுதினிப் படகில் இருந்து கடலில் மலர் தூவி, உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் முள்ளிவாய்க்கால் நினைவுகளை சுமந்த முள்ளிவாய்க்கால் கஞ்சியும், உயிரிழந்தவர்களின் நினைவாக மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

1985 மே 15 இல் இதே போன்ற நாளில், நெடுந்தீவு கடற்பரப்பில் நெடுந்தீவு மாவிலித் துறைமுகத்தில் இருந்து புங்குடுதீவு குறிகாட்டுவான் நோக்கி கடலில் குமுதினி படகில் மக்கள் பயணித்த போது கடற்படையினரால் 7 மாத பெண் குழந்தை, பெண்கள் அடங்கலாக 36 பேர் நடுக்கடலில் வைத்து வெட்டிப் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

அவர்களை நினைவுகூரும் இந்நிகழ்வில், சிவகுரு ஆதீன குரு முதல்வர் தவத் திரு வேலன் சுவாமிகள், நெடுந்தீவு பங்குத்தந்தை எஸ்.பத்திநாதன், மதத் தலைவர்கள், படுகொலையில் உயிழந்தவர்களின் உறவுகள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டு உணர்வெழுச்சியுடன் அஞ்சலி செலுத்தினர். (01)



# யாழில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது

யாழ் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கபட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தின் பேருந்துத் தரிப்படத்திற்கு அருகாமையில் பதினொன்றரை மணி அளவில் கஞ்சி வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது.

குறித்த நிகழ்வில், யாழ் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி சிவபாதம் இளங்கோதை மற்றும் அங்கத்தவர்கள், குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கோமகன் போன்றோர் கலந்து கொண்டிருந்தனர். (01)

# யாழில் குழந்தை பிரசவித்த 15 வயதுச் சிறுமி மீட்பு காரணமான இளைஞனையும் பிடித்த பொலிசார்!

*யாழ்.போதனா வைத்தியசாலையில் குழந்தையைப் பிரசவித்த பின்னர், குழந்தையை வைத்தியசாலையில் கைவிட்டுச் சென்ற 15 வயதான சிறுமியை பொலிஸார் மீட்டுள்ளனர்.*

*அத்துடன், சிறுமியை வன்புணர்ந்து கர்ப்பமாக்கிய குற்றச்சாட்டில் 25 வயதான இளைஞனை பொலிஸார் கடந்த 12 ஆம் திகதி கைது செய்து விளக்கமறியலில் வைத்துள்ளனர்.*

*துன்னாலையில் கராஜ் ஒன்றில் பணியாற்றும் மல்லாவிப் பகுதியைச் சேர்ந்த 25 வயதான இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.*

*குறித்த 15 வயது சிறுமி மந்திகை ஆதார வைத்தியசாலையில் பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், பிறந்த குழந்தை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நலமாக உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.*

*இது குறித்து மேலும் தெரியவருவதாவது,*

*யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த வாரம் 15 வயதான சிறுமி பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். தாயரும் சிறுமியுடன் உதவிக்கு நின்றுள்ளார். சிறுமிக்குக் குழந்தை பிறந்ததும் மறுநாள், தாயும் சிறுமியும் குழந்தையை வைத்தியசாலையில் கைவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தனர்.*

*சம்பவம் தொடர்பில் வைத்தியசாலை நிர்வாகத்தினர் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர். முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், சிறுமி நெல்லியடி பொலிஸ்பிரிவுக்கு உட்பட்ட பகுதியைச் சேர்ந்தவர் எனக் கண்டறிந்து, அது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.*

*நெல்லியடி பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளின் அடிப்படையில், குழந்தையை பிரசவித்த சிறுமியையும் அவரது தாயாரையும் கண்டறிந்து, பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.*

*அந்த விசாரணைகளின் அடிப்படையில், சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்தி, கர்ப்பமாக்கிய*

*இளைஞனைக் கைது செய்து நீதிமன்ற உத்தரவுப்படி விளக்கமறியலில் வைத்துள்ளனர்.*

*இதுவரை தாயும் பிறந்த குழந்தையும் இணைக்கப்படவில்லை என்றும் அறியவருகிறது.* *(01)*




# இலங்கை கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் ஷம்மி சில்வா குழுவினருக்கு தடையுத்தரவு

*இலங்கை கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் ஷம்மி சில்வா மற்றும் அதன் செயலாளர் கிரிஷான் கபுவத்த ஆகியோருக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இன்று தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.*

*முறைப்பாட்டுக்கு எதிராக பிரதிவாதியான சங்கத் தலைவர், சட்டவிரோதமாகவும் தன்னிச்சையாகவும் ஒழுக்காற்று விசாரணையை ஆரம்பித்துள்ளதாக முறைப்பாட்டாளர் சார்பில் நீதிமன்றில் விடயங்களை முன்வைத்த சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.*

*மேலும், கிரிக்கெட் அமைப்பில் ஊழல், முறைகேடுகள் நடப்பதாகவும் செய்தியாளர் சந்திப்பு நடத்தி வெளிப்படுத்தியதால், வெளிப்படுத்தியவர்களுடைய பணிகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் முறையிடப்பட்டது.*

*அதன்படி, புகாரின் உண்மை தன்மையை பரிசீலித்த மாவட்ட நீதிபதி, ஒழுங்கு விசாரணை நடத்த தடை விதித்து உத்தரவு பிறப்பித்தார்.*

*மேலும், பிரதிவாதிகளை எதிர்வரும் 29ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணையும் அனுப்பப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.*

*(04)*



# இளைஞர் மத்தியில் வன்முறை மற்றும் தீவிரவாதச் சிந்தனைகளைத் தடுத்தல்

## காரைதீவில் செயற்றிட்டம் முன்னெடுப்பு

(எம்.எம்.றம்ஸீன்)

காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன் அவர்களின் வழிகாட்டலில், GAFSO அமைப்பின் அனுசரணையில் "இளைஞர் யுவதிகளை வலுப்படுத்தல்" எனும் தொனிப்பொருளுக்கமைய "இளைஞர்கள் மத்தியில் வன்முறை மற்றும் தீவிரவாதப்போக்குச் சிந்தனைகள் தூண்டப்படுவதிலிருந்து தடுத்தல்" எனும் கருப்பொருளிலான செயற்திட்டத்தின் ஐந்தாம் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில், காரைதீவு பிரதேச செயலக உளவளத்துணை உத்தியோகத்தர் திருமதி.எம்.பாத்திமா பர்சானாவின் "சமூக மேம்பாட்டிற்கான அடிப்படை உளவளத்துணை திறன் மற்றும் நட்புறவு திறன்" எனும் தலைப்பிலான விரிவுரை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதேச செயலக அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர், GAFSO அமைப்பின் மாவட்ட செயற்திட்ட ஒருங்கிணைப்பாளர் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

# கலாசாலையில் அன்னையர் தினச் சிறப்பு நிகழ்வு மூத்த எழுத்தாளர் கோகிலா மகேந்திரன் பங்கேற்பு




அன்னையர் தினத்தைச் சிறப்பிக்கும் ஒன்றுகூடல் இன்று காலை கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இடம்பெற்றது.

உடற்கல்வி நெறி ஆசிரிய மாணவி விமல்ராஜ் உஷாநந்தினி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாக மூத்த எழுத்தாளரும் உளவளத் துணையாளருமாகிய கோகிலா மகேந்திரன் கலந்து கொண்டு "அன்னையாக ஆசிரியர்" என்ற பொருளில் உரையாற்றினார்.

நிகழ்வில் அன்னையர் தினம் குறித்த ஆசிரிய மாணவர் உரையை றோமன் கத்தோலிக்க நெறியைச் சேர்ந்த கமலினி சுதாகர் ஆற்றினார்.

அதிதி அறிமுகவுரையை விரிவுரையாளர் வே. சேந்தன் நிகழ்த்தினார். கலாசாலையின் றோமன் கத்தோலிக்கம், உடற்கல்வி, விசேட கல்வி ஆங்கிலம் ஆகிய நெறிகளைச் சேர்ந்த ஆசிரிய மாணவர்கள் இணைந்து உருவாக்கிய அன்னையர் தினம் பற்றிய ஆவணப் படமும் திரையிடப்பட்டது.

கலாசாலை அதிபர் ச.லலீசன் நிறைவுரையாற்றினார். கலாசாலையின் முகாமைத்துவக் குழுவினரால் அதிதிப் பேச்சாளராகக் கலந்து கொண்ட கோகிலா மகேந்திரன் பொன்னாடை போர்த்தியும் மாலை அணிவித்தும் கௌரவிக்கப்பட்டார்.








# மிதி வெடி




இந்தக் கிழமை அரசியல்வாதிகள் எல்லாரும் நினைவேந்தலில "பிஸி" யா இருப்பினம். பொது வேட்பாளர் கதை எல்லாம் கொஞ்ச நாளைக்கு அமந்து போய்க் கிடக்கும்.

இது தானே எங்கட ஆக்களின்ர பெரிய பிரச்சினை. ஒரு விசியத்தை ஒராள் தொடக்கி விட்டால், எல்லாரும் கொண் டோடித் திரிவினம். அதை "ட்ரெண்டிங்" எண்டு வேற சொல்லுவினம். இன்னொரு விசியம் வந்துட்டுதெண்டால், இதை இப்பிடியே விட்டுப்போட்டு அதைப் பிடிச்சுத் தொங்குவினம்.

இந்த "வீக்னஸ்" தான் கனபேருக்கு "பொசிற்றிவ்" ஆப் போகுது.. தமிழரசுக் கட்சிக்கு ஆரு தலைவரெண்டதில தொடங்கி இப்ப பொது வேட்பாளர் எண்டதில வந்து நிக்கினம்.

நான் ஒண்டு மட்டும் அடிச்சுச் சொல்லுறன், இன்னொரு தமிழ்ச்செல்வன் பிறப்பெடுத்து வந்தால் ஒழிய தமிழ்க் கட்சிகளை ஒருக்காலும் ஒண்டாச் சேர்க்க மாட்டியள். இது தெரியாமல், பாவம் சாமியார். படாத பாடு படப் போறார் எண்டதை மட்டும் தான் நான் சொல்ல ஏலும்.

அதவிடுங்கோ. நான் சொல்ல வந்தது வேற பாருங்கோ. தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் எண்டா என்னவெண்டே தெரியாதவையெல்லாம் முள்ளிவாய்க்கால் கஞ்சி வாக்கிறதைப் பார்க்க எனக்கு அப்பிடியே புல்லரிச்சுப் போச்சுதுங்கோ..

ஆடுவினம், பாடுவினம் ஆட்சி நடத்திறவையோட கூடுவினம், கொண்டா டுவினம் ஆனால் "மே 18, செப்ரெம்பர் 23, நவம்பர் 27" எண்டால் எங்கட ஆக்களுக்கு தமிழ்த் தேசியமும், விடுதலை உணர்வும் எங்கயிருந்து தான் பொங்கிப் பிரவாகிக்குதோ தெரியேல்ல.

ஆனாலும் சில கெட்டதுகள் நடக்கேக்க பல நல்லதுகளும் நடக்கும் பாருங்கோ. தமிழரசுக் கட்சியை சில்லாங் கொட்டையாக்கிப் பிரிச்சு மேயுறதப் பாக்கேக்க விசர்வந்தாலும், ஆளாளுக்குக் குத்து வெட்டுப்படேக்க கிணறு வெட்டப் பூதம் கிளம்பின கதையா கன விசியங்கள் வெளியில வருகுது பாருங்கோ.!

தமிரழசுக் கட்சி உருப்பட வேணுமெண்டா ரெண்டு பக்கத்தாலும் மும்மூண்டு பேரைப் போட்டுத் தள்ளினால் தான் தீர்வு. அதில முன்னாள் - இந்நாள் - வருங்கால எம்.பி மாரும் அடக்கம்!

உதைவிடுங்கோ. இங்கால நினைவேந்தல் பக்கமா வாங்கோ. நான் முதலே சொன்னது போல . "மே 18, செப்ரெம்பர் 23, நவம்பர் 27" எண்டா மட்டும் தான் எங்கட ஆக்களுக்குத் தேசியம் பெருகும். அதிலும் தேர்தல் ஒண்டு வரப்போகுதெண்டால் ஆளாளுக்குத் தள்ளு முள்ளுப் பட்டுத் தேசியப் போர்வையைத் தூக்கிப் போடுறதுக்காக உயிரையும் விடுவினம் பாருங்கோ.

அதிலயும் ஒற்றுமையாச் செய்யத் தெரியாது. நடு றோட்டுக்கு அங்கால எங்கட கொட்டில், இங்கால அவையின்ர கொட்டில. நீங்கள் "பொக்ஸ்" வைச்சு பாட்டுப் போட்டால், நாங்கள் பெரிய "ஸ்பீக்கர்" கட்டுவம்.

இது கூடப் பரவாயில்லை, இப்ப முள்ளிவாய்க்கால் வாரம் ஆரம்பிச்சிருக்கு. நினைவேந்தல ஆர் செய்யுறது? பொதுச் சுடரை யார் ஏத்துறது எண்ட அடி, பிடி ஒரு பக்கம் இருக்க. கஞ்சி ஊத்துறவரை எப்பிடிக் கழுவி ஊத்தலாம் எண்டு ஒரு கூட்டம் திரியுது பாருங்கோ.

உண்மையாக, எங்களுக்கு நடந்த கொடுமையை எங்களுக்கு அடுத்த சந்ததிக்குக் கொண்டு காவ வேணுமெண்டால் ஊர் கூடித் தேர் இழுத்தால் தானே நகரும்.

முள்ளிவாய்க்கால் கஞ்சி எண்டது கடைசிச் சண்டை நேரத்தில எங்கட இனம் பட்ட அவலத்தை அடையாளப்படுத்தி, உப்புமில்லாமல், ஒரு சுவையுமில்லாமல் உயிர் வாழ்ந்தால் போதுமெண்டு ஒண்டாய் அமர்ந்து ஒரு பிடி அரிசியைப் பகிர்ந்துண்ட அந்தக் கொடிய நாள்களை நினைக்கப்பண்ணி இண்டைய பிள்ளயளுக்கு அன்றைய அவலத்தை வெளிப்படுத்திற ஒரு அடையாளம்!

ஆர் குத்தினாலும் எங்களுக்கு அரிசி ஆகினால் சரி தானே?

அதை விட்டுட்டுட்டு, கஞ்சி வலி மிகுந்ததா? சுவை மிகுந்ததா எண்டு பட்டிமண்டபம் நடத்திற நேரமா இது? ஆளாளுக்கு அவையின்ர வாய்க்கு வந்த படி அவிட்டு விட்டுக் கொண்டிருக்க அடுத்தவன் வாய்க்கு அவல் அள்ளிக் குடுத்ததாப் போச்சுது போங்கோ.!

சாவகச்சேரியில அவர் கஞ்சி குடுத்தாராம் எண்டு இவற்றை ஆக்கள் விமர்சிக்க, செஞ்சிலுவையில ஏறிச் சி(சீ)றி பாய்ந்த கதை எண்டு அவை சொல்ல, ஐ.நாவுக்கு அறிக்கை குடுத்த கதை ஒண்டு இவைசொல்ல, பல்பொருள் அங்காடி பல வாங்கின கதையெண்டு இவை ஒண்டு சொல்ல தமிழரசு சந்தியில சீரழிஞ்சு தொங்குது..

தலைமைக்கு ஆசைப்படுற ஆக்கள் தங்கள் தொண்டர்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலை. இப்ப நிலைமை கைமீறிப் போட்டுது எண்டு தான் சொல்ல வேணும்.

என்னைப் பொறுத்த வரை அருணாச்சல பிள்ளை ஐந்து கைகொண்ட மால் மருகன் அடக்கி வாசிச்சிருந்தால் எல்லாம் நன்மையில முடிஞ்சிருக்கும்!

"ஆனை" ஆரம்பிச்சு வைச்ச தீ இப்ப "ஜீவன்" கொண்டு மூச்சாப் பரவீற்றுது. இங்காலயும் ஒண்டு ரெண்டு ஒண்டிக்கு ஒண்டியா நிண்டு இப்ப பத்தி எரியுது.

இந்த நினைவேந்தல் நேரத்திலயாவது, "இதை நான் செய்யுறன்", "அதை நீங்கள் பாருங்கோ" எண்டு ஒண்டு பட்டு நிண்டால் ஒண்ட வந்ததுகள் ஒன்றும் அண்டாதுகள். இல்லையெண்டா உசுப்பேத்தி விட்டவையெல்லாம் வானேறிப் பறக்க தலைவர் பதவி கனவாகிக் கனடாக்குப் போயிடும் பாருங்கோ.

"தலை இருக்க வால் ஆட விடப்படாது பாருங்கோ. ஆனைக்கும் அடி சறுக்கும் – அறிவகத்துக்கும் இடி இறங்கும்!" எண்டுறாங்கள். என்னவோ சொல்லுறதைச் சொல்லிப் போட்டன். எப்பவும் "ஒற்றுமையே பலம்"

நரமுனி

# ரி-20 உலகக் கிண்ணத்தொடர் பங்களாதேஷ் அணி அறிவிப்பு




2024 ஆம் ஆண்டுக்கான ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் பங்கெடுக்கும் பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் 15 வீரர்கள் அடங்கிய குழாம் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தக் குழாத்தில் 2022 ஆம் ஆண்டு ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் உள்ளடக்கப்படாத அனுபவ சகலதுறைவீரரான மஹ்மதுல்லா இணைக்கப்பட்டிருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

பங்களாதேஷ் அணித் தலைவராக நஜ்முல் ஹொசைன் ஷன்டோ தொடர்வதோடு, பிரதித் தலைவர் பொறுப்பு தஸ்கின் அஹ்மட்டிற்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

தஸ்கின்அஹ்மட்தற்போது சிறு உபாதை ஒன்றுக்கு முகம் கொடுத்திருக்கின்ற போதிலும் அவர் உலகக் கிண்ணத்திற்கு முன்னர் பூரண உடற்தகுதியினைப் பெறுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ரி-20 உலகக் கிண்ணத் தொடரிற்கான குழு டி இல் உள்வாங்கப்பட்டிருக்கும் பங்களாதேஷ் அணியானது தனது முதல்போட்டியில் இலங்கை அணியை ஜூன் 8ஆம் திகதி எதிர்கொள்ளவிருக்கின்றது.

ரி-20 உலகக் கிண்ணத் தொடருக்கு தயாராகும் விதமாக பங்களாதேஷ் அணி, ஐக்கிய அமெரிக்க அணியுடன் 3 போட்டிகள் கொண்ட ரி-20 தொடர் ஒன்றில் ஆடவிருக்கிறது. இந்தத் தொடர் வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

பங்களாதேஷ் ரி-20 உலகக் கிண்ண அணி விபரம் -

நஜ்முல் ஹொசைன் ஷன்டோ (தலைவர்), தன்சிம் ஹஸன் தமிம், லிட்டன் தாஸ், சகிப் அல் ஹசன், தவ்ஹித் ரிதோய், மஹ்மதுல்லா, சௌம்யா சர்க்கார், ஜாகேர் அலி, மஹேதி ஹஸன், தஸ்கின் அஹ்மட், தன்வீர் இஸ்லாம், ரிசாட் ஹொசைன், முஸ்தபிசுர் ரஹ்மான், சொரிபுல் இஸ்லாம், தன்சித் ஹஸன் சகிப்.



# விபத்துக்குள்ளான அமெரிக்கப் பாலம் வெடிவைத்துத தகர்க்கப்பட்டது

அமெரிக்காவின் மேரிலாண்ட் மாகாணத்தின் பால்ட்டிமோரில் பிரம்மாண்ட சரக்குக் கப்பல் மோதியதால் சேதமடைந்த ஆற்றுப் பாலம் வெடிவைத்து முழுமையாகத் தகர்க்கப்பட்டுள்ளது.

இலங்கையை நோக்கி 'டாலி' என்ற சரக்குக் கப்பல் பால்டிமோர் நகரிலுள்ள படாஸ்ப்ஸ்கோ நதி வழியாக கடந்த மார்ச் மாதம் சென்று கொண்டிருந்தபோது, எதிர்பாராத விதமாக ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டிருந்த பாலத்தில் மோதியது. இதில், அந்தப் பாலத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது.

இந்த விபத்தில் ஆற்றுக்குள் மூழ்கிய 8 பேரில் 2 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். எஞ்சிய 6 கட்டுமானப் பணியாளர்கள் உயிரிழந்தனர். கப்பலில் இருந்த 23 இந்தியப் பணியாளர்கள் முன்கூட்டியே அதிகாரிகளை எச்சரித்ததால் பாலத்தில் போக்குவரத்து நிறுத்தப்பட்டு பெரும் உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், இனி பயன்படுத்த முடியாத நிலையில் இருந்த பாலத்தின் இடிபாடுகளை கொஞ்சம் கொஞ்சமாக அகற்றிவந்த அதிகாரிகள், அதன்எஞ்சிய பகுதிகளை தற்போது வெடிவைத்துத் தகர்த்துள்ளனர்.

இதன் மூலம், படாஸ்ப்ஸ்கோ நீர்வழித் தடத்தைச் சுத்தம் செய்யும் பணிகளில் முக்கிய மைல்கல் எட்டப்பட்டுள்ளதாக சமூகவலைத்தளப் பதிவின் ஊடாக பால்டிமோர் நகர மேயர் பிராண்டன் எம். ஸ்கொட் தெரிவித்துள்ளார். (04)

# தோட்டத் தொழிலாளரின் நாட் சம்பளம் இதுவரை மறுப்புகள் எதுவும் வரவில்லை!

## தொழில் திணைக்களம் தெரிவிப்பு



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபா சம்பளத்தை வழங்குவது தொடர்பில் வெளியிடப்பட்ட வர்த்தமானிக்கு எதிராக பெருந்தோட்ட நிறுவனங்களிடமிருந்து இதுவரையில் எவ்வித முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை என தொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆதன்படி, கடந்த 30 ஆம் திகதி நள்ளிரவு வெளியிடப்பட்ட வர்த்தமானி தொடர்பில் மறுப்பினைத் தெரிவிக்கும் காலம் இன்றுடன் நிறைவடைகின்றது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ஷரூபா நாளாந்த சம்பளத்தை வழங்கும் வகையில், தொழில் ஆணையாளரால் கடந்த 30 ஆம் திகதி வர்த்தமானி வெளியிடப்பட்டது. ஆனால், குறித்த வர்த்தமானி தொடர்பில் பெருந்தோட்ட நிறுவனங்களிடமிருந்து இதுவரையில் எவ்வித முறைப்பாடுகளோ, மறுப்புகளோ கிடைக்கவில்லை என தொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது. வர்த்தமானியில் அறிவிக்கப் பட்டுள்ள 1700 ரூபா தொடர்பிலான, மறுப்புகள் அல்லது எதிர்ப்புகளைத் தெரிவிக்கும் கால அவகாசம் நிறைவடைந்த பின்னர், அது தொடர்பிலான அறிக்கையை தொழில் அமைச்சருக்கு சமர்ப்பிக்கவுள்ளதாக தொழில் திணைக்கள அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார். (04)

# 'லீ' யின் 20 ஆண்டு ஆட்சி சிங்கப்பூரில் நிறைவடைவு



சிங்கப்பூர்பிரதமர்லீசியென்லூங்தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். இவர் கடந்த 20 ஆண்டுகளாக சிங்கப்பூர் பிரதமராகச் செயற்பட்டிருந்தார்.

தற்பொழுது, சிங்கப்பூரின் ஆட்சி அதிகாரம் துணைப் பிரதமரும் நிதியமைச்சருமான லோரன்ஸ் வொங்கிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூர் 1965ஆம் ஆண்டு சுதந்திர நாடாக உருவாகியதிலிருந்து 3 பிரதமர்கள் மாத்திரமே ஆட்சி செய்துள்ளனர்.

நாட்டின் முதலாவது பிரதமரும் நவீன சிங்கப்பூரின் ஸ்தாபகர் என அழைக்கப்படுபவருமான லீ க்வான் யூ , 25 ஆண்டுகள் பிரதமராகப் பதவி வகித்திருந்தார்.

அவரையடுத்து கோ சொக் டொங் என்பவர் 13 ஆண்டுகள் பிரதமராகப் பதவியிலிருந்தார்.

இவருக்குப் பின்னர், சிங்கப்பூரின் ஆட்சி அதிகாரம் தற்போது இராஜினாமாச் செய்தவரும், லீ க்வான் யூ வின் மகனுமான லீ சியென் லூங்கிற்கு வழங்கப்பட்டது. (04)

# கிளிநொச்சி மாவட்டத்தின் சாரண மாவட்ட ஆணையாளராக சி.விக்னேஸ்வரன் நியமனம்



கிளிநொச்சி மாவட்டத்தின் சாரண மாவட்ட ஆணையாளராக சி.விக்னேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார். அவருடைய நியமனத்துக்கான உத்தியோகபூர்வக் கடிதத்தினை பிரதம சாரண ஆணையாளர் ஜனப்ரித் பெனான்டோ வழங்கி வைத்தார்.

புதிய மாவட்ட ஆணையாளர், பளை மத்திய கல்லூரியில் சிறந்த சாரணராக சேவையாற்றி ஜனாதிபதி விருதினைப் பெற்றவர். அவர் அப்பாடசாலை தேசிய ரீதியில் பல சாதனைகள் படைப்பதற்கு காரணமாக இருந்தவர்.

அத்துடன் கிளிநொச்சி உதவி மாவட்ட ஆணையாளராகவும் அவர் கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அக்கரைப்பற்றில் சர்வதேச தாதியர் தினம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

உலகளாவிய ரீதியில் கொண்டாடப்பட்ட சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் தாதியர்களை கௌரவிக்கும் முகமாக அக்கரைப்பற்று ஐ.என்.பீ.எஸ்.கம்பஸ் ஏற்பாட்டில், அட்டாளைச்சேனை லொயிட்ஸ் மண்டபத்தில் 'சர்வதேச தாதியர் தின' நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் விசேட வளவாளராக சிரேஷ்ட உளவளத்துறை ஆலோசகரும் விரிவுரையாளருமான மனூஸ் அபூபக்கரும், மேலும் பல அதிதிகள் மற்றும் தாதி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

## கால்பந்தாட்டத் தொடரில் சம்பியனாக தம்பலகாமம் பிரதேச அணி முடி சூடியது



(ஹஸ்பர் ஏ.எச்)

மாவட்ட மட்ட கால்பந்தாட்ட போட்டித் தொடரில் தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட அணி சம்பியன் பட்டத்தை வென்றது.

குறித்த தொடரின் இறுதிப் போட்டியானது கந்தளாய் லீலரத்ன மைதானத்தில் நேற்று (13) இடம் பெற்றது.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஆறு பிரதேச செயலப் பகுதிகளை உள்ளடக்கிய அணிகள் பங்கு பற்றிய நிலையில், இறுதிப் போட்டியில் திருகோணமலை, தம்பலகாமம் அணிகள் ஒன்றையொன்று எதிர்கொண்டிருந்தன..

இப்போட்டியில் 5 - 0 என்ற கணக்கில் தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட அணி மாவட்ட மட்ட சம்பியனாகியது.

இவ்வணி மாகாண மட்டத்தில் இடம்பெறவுள்ள போட்டித் தொடரில் கலந்து கொள்ளவுள்ளது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க, விளையாட்டு உத்தியோகத்தர் கே.எம்.ஹாரிஸ் குறித்த விளையாட்டு வீரர்களை பயிற்சியளித்து வழிநடாத்தியிருந்தார்.

## சந்நிதி – கதிர்காமம் பாதயாத்திரை குழுவினர் இன்று முல்லைத்தீவில்!



சந்நிதி - கதிர்காமம் பாதயாத்திரை ஜெயாவேல்சாமி குழுவினர் நான்கு நாட்களில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருந்து முல்லைத்தீவு மாவட்டத்திற்குள் பிரவேசித்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை (11) கதிர்காமத்துக்கான இலங்கையின் மிக நீண்ட பாதயாத்திரையானது, யாழ்ப்பாணம் தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்திலிருந்து ஆரம்பமானது.

இன்று ஐந்தாவது நாள் குழுவினர் இயக்கச்சி ஆனையிறவு ஊடாக பரந்தன் பகுதியை வந்தடைந்தனர். இரவு நெத்தலி ஆறு பகுதியில் இவர்கள் தங்குவார்கள்.

நாளை (16) வியாழக்கிழமை வள்ளிபுனம் பிரதேசத்திற்குள் பிரவேசிப்பார்கள். மழையும் வெயிலும் கலந்த காலநிலையில் சுமார் 110 அடியார்கள் இப்பாதயாத்திரையில் பங்கேற்று வருகின்றனர்.




## மாற்று ஆற்றல் படைத்தவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் தியகமவில்




(அஸ்ஹர் இப்றாஹிம்)

மாற்று ஆற்றல் படைத்தோருக்கான தேசிய பரா மெய்வல்லுநர் போட்டிகள் அண்மையில் தியகம மஹிந்த ராஜபக்ஷ மைதானத்தில் இடம்பெற்றன.

நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த மாற்று ஆற்றல் படைத்த படைத்த பலர் தமது திறமைகளை வெளிப்படுத்தி பரிசில்களையும் சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டனர்.

# அம்பாறை மாவட்ட சிறுபோக விவசாயிகளுக்கு உரமானியத்துக்குப் பணம் வழங்க நடவடிக்கை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்ட சிறுபோக விவசாயிகளுக்கு இப் போகத்திற்குரிய உரமானிய பணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கமநல சேவை அபிவிருத்தி நிலையங்களினூடாக பிரதேச கமக்கார அமைப்புகள் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

சிறுபோக விவசாயிகளுக்கு இம் முறை ஏக்கருக்கு 6000 ரூபா வழங்கப்படவுள்ளதாக ஏற்கனவே அறிவிக்கட்டுள்ளது.

அதற்கமைவாக பிரதேச கமக்கார அமைப்புகள், விவசாயிகள் தொடர்பான தகவல்களைப் பெற்று, சம்பந்தப்பட்ட கமநல அபிவிருத்தி அலுவலகங்களுக்கு ஏற்கனவே வழங்கியுள்ளன.

உரமானியப் பணம் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக வைப்புச் செய்யப்படவுள்ளது.



இதே வேளை எதிர்வரும் காலங்களில் விவசாயிகளுக்கு பணத்தை வழங்கி, சலுகை விலையில் உரத்தினை விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும், என விவசாய அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

தற்போது சந்தையில் விற்பனையாகும் உரத்தில் தமக்கு நம்பிக்கை இல்லை எனவும், கடந்த பெரும்போகத்தின் போது அம்பாறை மாவட்டத்தில் தனியார் விற்பனை நிலையங்களில் கொள்வனவு செய்யப்பட்ட உரம் விவசாயிகளுக்கு நிறைவான பயனளிக்க வில்லை என்றும், அதனால் விளைச்சலில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டதாகவும் விவசாயிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

# புனித ஹஜ் யாத்திரைக்கு செல்பவர்களை வழியனுப்பிடும் நிகழ்வு சம்மாந்துறையில்

இஸ்லாத்தில் ஐம்பெரும் கடமைகளில் இறுதிக் கடமையாகிய புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக புனிதமான மக்கமா நகர் செல்ல இருக்கும் சம்மாந்துறை பிரதேச செயலக உத்தியோகத்தர்களை வழியனுப்பும் நிகழ்வு பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனிபா தலைமையில் பிரதேச செயலக கேட்பேர் கூடத்தில் இடம்பெற்றது.

எம்.எஸ்.எப் பஸ்லுனா (கிராம உத்தியோகத்தர்), ஏ.ஆர்.எப் லுபைறா (அபிவிருத்தி உத்தியோகத்தர்-காணிப் பிரிவு), கே.எம்.எஸ் ஜெபியா (சமூக சேவை பிரிவு) ஆகிய உத்தியோகத்தர்கள் இம்முறை புனித ஹஜ் யாத்திரையை மேற்கொள்கின்றனர்.



இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம் அஸ்லம், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.பி.எம் /ஹசைன், காணி உத்தியோகத்தர், நிதி உதவியாளர், காரியாலய உத்தியோகத்தர்கள் மற்றும் ஹஜ் பிரயாணம் செல்லும் உத்தியோகத்தர்களின் துணைவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் இஸ்லாமிய மார்க்க சொற்பொழிவு கலாசார உத்தியோகத்தர் மௌலவி ரஸ்மி எம் மூஸா(ஸலபி) அவர்களினால் நடத்தப்பட்டது.






## சமூகவிரோதிகள் நுழைகின்றனர்!

## சுற்றுமதில் அமைத்துத்தருமாறு பாடசாலைச் சமூகம் கோரிக்கை





(எம்.எம்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருதில் எம்.எஸ்.காரியப்பர் வித்தியாலயம் மிகவும் பின்தங்கிய ஒரு பாடசாலையாகக் காணப்படுகிறது. சுனாமியினால் பாதிக்கப்பட்ட மீள் குடியேற்றப்பட்ட மக்களின் பிள்ளைகள் அதில் கல்வி கற்கின்றனர்.

இந்தப் பாடசாலையில் 100 மீற்றர் நீளமான சுற்றுமதில் கட்டப்படாமல் உடைந்த நிலையில் காணப்படுகிறது.

இவ்வாறான நிலையில் அந்த சுற்றுமதில் கட்டப்படாமையின் காரணமாக, சுற்றுமதில் அற்ற பகுதிகளின் ஊடாக பாடசாலை வளாகத்துக்குள் துர்நாற்றம் வீசக்கூடிய குப்பை கூழங்கள் வீசப்படுகின்றன.

அது மட்டுமல்லாது, சமூகவிரோத, துஷ்பிரயோக நடவடிக்கைகளும் இதன் மூலம் நடைபெற ஏதுவாகிறது.

அதாவது போதைப்பொருள் பாவனையாளர்கள் மதில் இல்லாத பகுதிகளினூடாக பாடசாலைக்குள் வருவதாகவும், உள்ளே இருந்து கொண்டு போதைப் பொருட்களைப் பாவிப்பதாகவும் அதனைக்கைமாற்றும் இடமாக இப்பாடசாலையைப் பயன்படுத்துவதாகவும் அப்பிரதேச மக்கள் குறிப்பிடுகின்றனர்.

ஆகவே, காலத்தின் அவசியம் கருதி, அந்தச் சுற்றுமதிலை அவசியமாக அதேநேரம், அவசரமாக அமைத்திட வேண்டியுள்ளது, என்று அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்தச் சுற்றுமதிலை அமைத்துத் தருமாறு செய்து தருமாறு பாடசாலையின் அதிபர் எம்.எஸ். எம்.ஆரிப் பல தரப்பினரிடமும் பல தடவைகள் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்தபோதிலும் இவ்விடயத்தில் யாரும் அக்கறை செலுத்தவுமில்லை, கிஞ்சித்தும் செவி சாய்க்கவும் இல்லாது பாராமுகமாகவே இருக்கின்றனர், என்று பாடசாலைச் சமூகம் கூறுகின்றது.

எனவே, மிகவும் பின் தங்கிய பாடசாலையாகக் காணப்படும் சாய்ந்தமருது பொலிவேரியின் எம்.எஸ். காரியப்பர் வித்யாலயத்தின் சுற்றுமதிலை அமைத்துக்கொடுப்பதன் மூலம் அப்பகுதியில் இடம்பெறுகின்ற பல சட்டவிரோதச்செயல்களைத் தடுக்க முடியும். இதற்கு அரசியல்வாதிகளோ அல்லது தனவந்தர்களோ உதவ முன் வருவார்களா? என்றும் அச்சமூகம் கேட்டு நிற்கின்றது.


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக
உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை
பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க
ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver
செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து
உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
GET IT ON Google Play
Download on the App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே
புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து
வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp
மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!